பதிவு எண்—M 5720.　　வெள்ளிக் கிழமையில்　　குருகுலத் தாள்

647

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—6　　குருகுலம், மாம்பாக்கம் ;　　விசய, மாசி 19—2—54　　தளிர்—18

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

# அமைந்த அழகு

பெரிய பண்புகளைப் பெற்றுச் சிறப்பது, வாழ்க்கை வளர்ச்சி! பிறவியிற் பெறுகின்ற பெரும்பேறு இது! உயிர்வளர்ச்சி என்பது இது!

ஏனை உடம்பு வளர்ச்சி, பொருள் வளர்ச்சி முதலியனவெல்லாம், இப் பண்பு வளர்ச்சி பெறுவதற்காகவே கவனிக்கத்தக்கவை.

பண்புகளில், உயர்ந்த பண்புகளை அடைந்து மேம்படுகின்ற போது, மக்கள் உயர்ந்தோராய்த் திகழ்கின்றனர். அவர்களால் உலகமும் நலம் பெறுகின்றது.

அத்தகைய உயர்ந்தோரையே 'நலம் நிரப்பியவர்' என்னுங் கருத்தால், 'சான்றோர்' என உலகம் அழைத்து மகிழ்கின்றது. நிரம்பிய அந்த நலமே 'அமைந்த அழகு' எனப்பட்டது.

சான்றோர், தம் எதிரில் நேர்பட்ட எதனையும் யாரையும் துலாக்கோல் போல் நிறுத்துக் கண்டுகொள்ளும் ஆற்றல் அமைந்தவர். ஆதலால், அவர் முன்னிலையில் யாரும் எதுவும் தப்பிவிடுதல் இயலாது. அவரெல்லாம் உண்மைத் திறத்தில் ஊன்றியவராதலின், தமக்கமைந்த அச் சமநிலைத் திறத்தால் அவர் அவ்வாறு நிறுத்துக் காண இயல்கின்றது.

நிறுத்துக் கண்டுகொள்வதுடன், அந் நிறைக்குத் தக்கபடி அளவு கோணாமல் மக்களிடம் நடந்துகொள்ளவும் சான்றோர்க்கு இயல்புண்டு. பண்புமிக்க அச் செய்கை யார்க்கும் நன்மையே பயக்கும். ஒரு பக்கமாய்க் கோணுதலில்லாமையால் மக்கள் பலரும் அவரை அகமார நேசிப்பர்; அவர் ஆணைவழி ஒழுகித் திருந்தி உயர்ந்து மேம்படுவர்; இவ்வாறு நடுநிலைமையால் உலகம் இதமுறும்!

மெய்யில் அமைந்து, அம் மெய்க் கண்ணுல் யார்க்கும் ஒப்ப ஒழுகும் அழகு, எல்லாராலும் 'அழகு' எனறே கொள்ளப்படும். 'சான்றோர்க்கு அணி' என்று இக்கனை ஆசிரியர் உரைப்பார்! அமைந்து ஒருபால் கோடாமை எவ்வளவு கவர்ச்சியான உயர் பண்பாய்த் திகழ்கின்றது!

சமன்செய்து சீர்தூக்கும்
　　கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

சமன் செய்து சீர்தூக்குங்கோல் போல்—நடுவுநிலையாகிய ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டு அளவை எடுத்துக் காட்டும் துலாக்கோல் போல, அமைந்து ஒருபால் கோடாமை—நடுவு நிலைமையிற் பொருந்தி ஒரு பக்கம் சாயாது ஒழுகுதல், சான்றோர்க்கு அணி—பெரியோர்க்கு அழகு!

அமைதலும் கோடாமையும் என்பவை, சமன் செய்தலும் சீர் தூக்கலும் என உவமையால் விளக்கினார்; சான்றோர்ப் பண்புகளில் துலாக்கோற் பண்புகள் அடங்கும்.

சமன் செய்தலாவது நிறுத்தல்; சீர் என்னும் அளவை, பொருள்களின் வரையறையை உணர்த்திற்று. சமன் செய்த பின்னர், அளவு இன்னது என்று புலப்படுமாதலின், 'சமன் செய்து சீர்தூக்குங் கோல்' என விதந்தார்; அமையாதவர் ஓராய்க் கோணுவாராதலின், அமைந்து கோடாமை சான்றோர்க்கு அணியாயிற்று.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| இலை | | தளிர் |
|---|---|---|
| 6 | விசய, மாசி, 19-2-54 வெள்ளி | 18 |


# பெரியோரைத் துணைக் கொள்க.

திருக்குறள் ஒரு அற நூல். அறம் என்பது அறு என்னும் பகுதியடியாகப் பிறந்தது. வரையறுக்கப்பட்டது என்று பொருள்படும். எதற்கு ஏற்ப வரையறுக்கப்பட்டதோ எனின் தெய்வத் திருவருளுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது என்பதாம். இத்தகைய அறத்தினைக் கூற வல்லவர் திருவருள் பெற்ற பெரியோரே யாவார்.

அற நூல்களுள் தலையாயது தெய்வத் திருவள்ளுவர் கூறிய திருக்குறள். அதற்கு ஒப்பானதும் மிக்கதும் உலகில் இதுவரை எங்கணுமே தோன்றவில்லை யென்பது பல திறத்தோரும் ஒப்புக் கூறும் உண்மை. அற வாழ்க்கையால் திருவருள் பெற்று இறுதிப் பேறாகிய வீட்டு நிலையை அடையலாம். அத்தகைய இறுதி நிலைவரை எட்டத் தகுந்த முறையில் அறத்தின் கொழுந்தோடிய எல்லை வரை சென்று கூறியவர் திருவள்ளுவர்!

உலகியல் வாழ்க்கை பொருளொடு தொடர்புடையது. நாட்டின் தலைவனாகிய மன்னன் பொருள் அனைத்திற்கும் தலைவன்; அவனுக்கு உணர்த்தும் பகுதி திருக்குறளில் பொருட்பால் என்னும் பகுதி. நாடு முழுதும் ஒரு பெரிய குடும்பம் என்று வைத்துக்கொண்டால் அதற்குத் தலைவன் மன்னன். அவனுக்குக் கூறிய அறமே நாட்டிலுள்ள குடும்பத் தலைவர்கட்கும் ஏற்கும்.

திருவள்ளுவர் அறத்தின் கொழுந்தோடிய மேல் எல்லை வரை சென்று கூறியவர் என்று கூறினோம். அத்தகைய விழுமிய நூலில் முடி மன்னன் ஒருவனுக்கு உரைப்பது போல அறம் உரைத்தார் எனின், முடியாட்சியே சிறந்த ஆட்சி யென்பது கருத்து. இதனை அறியாதார் திருவள்ளுவர் காலத்தில் முடியாட்சி நிலவியது, அதனால் முடிமன்னன் ஒருவனுக்கு உரைப்பதுபோலப் பொருட்பாலை வகுத்துரைத்தார் என்ப. அறம் என்பது முக்காலத்துக்கும் பொது என்பதனை அறிந்தனராயின் அந்நூலாகிய திருக்குறளில் கூறிய முறையும் எக்காலத்துக்கும் ஏற்புடைத்து என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியவராவர்.

மன்னன் கற்க வேண்டிய நூல்கள் இரண்டு வகை யென்றும், அவை அற நூலும் நீதி நூலும் என வகுத்துக் 'கல்வி' யென்னும் அதிகாரத்தில் பரிமேல் அழகியார் கூறினர். அங்ஙனம் அவர் கூறியதால் அறநூல் என்பது முக்காலத்துக்கும் பொதுவான வகையில் அடிப்படை நீதிகளைச் சொல்வது. நீதி நூல் என்பது அற அடிப்படையின்மேல் காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்ப இயைபுபடுத்திக் கொள்வதொன்று. நீதி நூலுக்கு உதாரணம் வேண்டின் இக்காலத்தில் சட்ட நூல்களைச் சொல்லலாம்.

அற நூல் காலப் பொதுமையுடையதானமையால் அவை நிலைத்தன, சட்ட நூல்கள் காலப் பொதுமையின்மையின் பின் வந்தோர் போற்றுமற் போக அவை மறைந்தன.

நீதி நூல்களை மன்னன் செய்யலாம். ஆனால் அற நூல்கள் மன்னன் இயற்ற முடியாது. அதனைக் கூற வல்லவர்கள் அரசரினும் உயர்ந்த அறவோரே. அத்தகைய அறவோரே யாவரினும் மேம்பட்டோர் என்றும், குணங்களில் மிக உயர்ந்த செந்தண்மை அல்லது தயை என்னும் குணம் உடையோர் என்றும் கூறுப. ஆதலால் இத்தகையோர் "அந்தணர் என்போர் அறவோர்" என்னும் திருவள்ளுவர் வாக்குக்குரியர். இவ்வறவோர் செந்தண்மைப் பண்புடையோரானமையின் 'செந்தண்மை பூண்டு ஒழுகுபவர்' என்று அவர்களைப்பற்றி மேலும் ஒரு விளக்கம் தெரிவித்தனர். அத்தகைய அறவோரையே பொருட்பாலில் ஏழாவது அதிகாரமாகிய 'பெரியாரைத் துணைக் கோடல்' என்பது.

மன்னன், காலத்துக்கு ஏற்ப நீதி நூல்கள் இயற்றி, அதற்கு ஏற்ப நீதி செலுத்தும் போது அற அடிப்படையினின்றும் வழுவாமற் காப்பதற்குப் பெரியோர் துணை இன்றியமையாததாம். அறம் பிழைத்து அரசியல் நடந்தால் அறமே அவ்வரசை அழித்துவிடும். 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்று இளங்கோவடிகள் கூறுமாற்றானிதனை யறிக. ஆகவே அறமுறை பிறழாது அரசு நடப்பதற்குத் துணை புரியும் பெரியோர்களை மன்னன் துணை கொண்டு ஆள்வானாயின் அவ்வரசை யாராலும் எதிர்த்து வெல்ல முடியாது.

இக்காலத்தில் எப்படியோ முடியாட்சி யொழிந்து குடியாட்சி ஏற்பட்டுவிட்டது. இக்குடியாட்சியிலும் தலைவராக ஒருவரே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவ்வொருவருக்குத் துணையாக அமைச்சர்களும் அவர்களுக்குத் துணையாகச் சட்ட அவையினரும் இருக்கின்றனர். தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர் வழி ஆட்சி நடப்பதால் ஏறக்குறைய இதுவும் முடியாட்சியை யொக்கும். முடியாட்சி முறைக்கும் குடியாட்சி முறைக்கும் உள்ள பெரியதொரு பேதம் தேர்தல் முறையேயாம். இனி அதிகார வரம்புகளிலும் பேதம் உண்டு. இப் பேதத்தினால் ஏற்படும் குற்ற நற்றங்களை ஆய்ந்து முடியாட்சி சிறந்ததா அல்லது குடியாட்சி சிறந்ததா என்பதனைக் கூறப்புகின் இக்கட்டுரையே ஒரு பெரிய நூலாக விரியும். அதனால் பயனும் இப்பொழுது ஏதுமில்லையானமையின் அதனை விடுத்து மேற் செல்வாம்.

நாட்டிலுள்ள பெரியோர்கள் சமயத்துறையில் மட்டும் உழைப்பவர் என்றும், சமயத்துறை உலகியல் முறைக்கு மாறுபட்டது என்றும் தவறாக இக்காலத்தில் கருதுகின்றனர். பெரியோர் என்போர் சமயத்துறையில் உழைப்பவர் என்பது உண்மை, ஆனால் சமயத்துறை யென்பது உலகியலுக்கு மாறன்று.

நாட்டிலுள்ள பெரியோர் கூறும் அறவுரைகளை மக்கள் தகுந்த முறையில் மதிப்பதில்லையானமையின் மக்களால் தேர்ந்தெடுக்கும் தலைவர்களும் போதுமானபடி மதிப்பதில்லை. ஆட்சி முறையில் ஏற்படும் பல சிக்கல்களுக்குத் தீர்வு தெரியாமல் ஆட்சியினர் விழிக்கின்றனர். அப்படிப்பட்ட இடுக்கண் வேளையில் அச்சிக்கலுக்குப் பலரும் பல வழிகளில் தீர்வு முறைகள் தெரிவிக்கின்றனர். யாவும் குறைபாடுடையனவானமையின் அவை தகுந்த பயனளிப்பதில்லை; அறமுறை பிறழ்வதால் கேடுகள் மலிகின்றன. காந்தியடிகள் கூறிப் போந்த 'இராம ராஜ்யம்' என்னும் நேர்மை வழுவா ஆட்சி நிலவ வேண்டுமாயின் நாட்டிலுள்ள பெரியோர்களின் துணை பெற்று ஆட்சி நடக்க வேண்டும். 'பெரியோரைத் துணைக்கோடல்' என்னும் அதிகாரத்தில் பெரியோர் என்போர் எப்படிப்பட்டவர் என்பதற்கு விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின்படி அமைந்த வரை இருக்கும் பெரியோரை நாடாள்வோர் மதித்து, அவர்கள் கூறும் அறவுரைகளுக்குச் செவிசாய்த்து, சட்ட அவையில் அவற்றைத் தெரிவித்து, அவற்றுக்கு ஏற்ப ஆட்சியை நடத்த வேண்டும்.

இவ்வாறு ஆட்சியினர் பெரியோர் துணை பெற்று ஆளவேண்டும் என்னும் திருவள்ளுவர் கருத்தை நாளும் பாம்பாக்கம் குருகுலம் வற்புறுத்தி வரும். பெரியோர் வழியில் ஆட்சி நிலவி நாடு நலம் பெறுக!

—முத்துசாமி.

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# தலைவர்களுக்குப் பாரதி காட்டும் வழி

(முன் தொடர்ச்சி)

காந்திய உணர்விலே ஊறிய பாரதி தலைவர்களுக்குச் சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க வேண்டும்; கொள்கை வேறு, வாழ்க்கை வேறு என்று இருக்கப்படாது; அப்படி மாறுபட்டிருப்பவர்கள் சமுதாயத் துரோகிகள் என்று வசனத்தில் எழுதுகிறார். நிலையான வெற்றி வேண்டில், அறமான செயல் வேண்டும் என்பது பாரதி காட்டும்வழி. "ஜெயம் நிலையாகச் செய்வதற்கு அறமே சிறந்ததோர் மார்க்கம்" என்று மாஜினியின் மூலம் நமக்கு எடுத்து விளக்குகிறார். மேலும மாஜினியின் மூலமே, பூரணத் தியாகத்திற்குத் தயாராக இருப்பவனே தலைவனாவான் என்பதை,

"என்னுடன் ஒத்த
தருமத்தை யேற்றோர்
இயைந்த இவ்வாலிபர் சபைக்கே
தன்னுடல் பொருளும்,
ஆவியுமெல்லாம்
தத்தமாய் வழங்கினேன்"

என்று நமக்கெல்லாம் அறிவுறுத்துகிறார். ஒரு தலைவன் சர்வாதிகார மனப்பான்மையின்றித் தன்னுடன் உழைப்போர் மனமறிந்து ஒற்றுமைப்பட்டுத் தான் என்றும் ஊழியனே என்ற பணியுணர்ச்சியோடு பணி செய்யவேண்டும். அயர்ச்சியும் தளர்ச்சியுமற்றவனாய் அப் பணியின்றி, வேறெந்தத் தொழிலிலும் ஈடுபடா ஏகாக்கிர சித்தமுடையவனாய் நிற்க வேண்டும். அதில் எவ்வாற்றாலும் தவற மாட்டேன்என்ற சங்கல்பத்தைத் திரிகரண சுத்தியுடன் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த இலட்சிய வெற்றியைப் பின் வரும் இரண்டு பாடல்கள் மூலம் பாரதி காட்டுகின்றார்.

"இவருடன் யானு மிணங்கியே
யென்றும்
இது அலாற் பிற தொழில்
இலனாய்த்
தவறறு முயற்சி செய்திடக் கடவேன்
சந்ததமும் சொல்லினால் எழுத்தால்,
அவமறச் செய்கை யதனால்
இயலும் அளவெலாம், எம்மவரிந்த
நவமுறு சபையினொருபெருங்
கருத்தை
நன்கிதின் அறிந்திடப் புரிவேன்"
இன்றும் எந்நாளும் இவை செயத்
தவறேன் மெய்யிது, மெய்யிது,
இவற்றை
என்றுமே தவறிழைப்பனேல் என்னை
ஈசனார் நாசமே புரிக,
அன்றியும் மக்கள்
வெறுத்தெனையிகழ்க
அசத்தியப் பாதகஞ் சூழ்க
நின்றதீ யெழுவாய் நரகத்தின்வீழ்ந்து
நித்தம் யான் உழலுக மன்னோ"

இவை ஏதோ மாஜினி எடுத்துக் கொண்ட பிரதிக்ஞையை அறிவிக்கும் சாதாரண ஒருசெய்தியன்று. பாரதியும் வெறும் பத்திரிகை நிருபர் அல்ல. ஆனால் மக்களைத் தலைமை தாங்கி இட்டுச் செல்லும் தலைவர்களுக்கு இருக்க வேண்டிய குணங்களையும் அவர்கள் கொள்ளவேண்டியபிரதிக்ஞையையுமே இதன் மூலம் செம்மையாக அறிவுறுத்துகிறார். கடமை தவறிய தலைவர்கள் ஆண்டவனுடைய கோபத்திற்கும், பொது மக்களின் இகழ்ச்சிக்கும் தவிர்க்க முடியாத பல தண்டனைகளுக்கும் ஆளாவர் என்பதைச் சுட்டிக் காட்டிக் கடமையாற்றும் நெறியிலே தலைவர்களுக்கு நல்ல வழி காட்டுகிறார் பாரதி.

மக்களை மக்களாகக் கருத வேண்டும்; அவர்களின் உணர்ச்சியையும், உரிமையையும் மதிக்க வேண்டும்.

"நாட்டு மாந்தர் எல்லாம்—தம்போல்
நரர்களென்று கருதார்
ஆட்டு மந்தையாம் என்று-உலகை
அரசர் எண்ணி விட்டார்"

என்று சர்வசுதந்திரப் போக்கைக் கண்டிக்கின்றார் பாரதி. அத்துடன் அமைய முடியவில்லை பாரதிக்கு. ஆம். பார்க்குமிடமெங்கணும் நீக்கமற அப் பரமனையே தரிசிக்கும் பண்பாளன் பாரதி. அதனால் உயிர்கள் அனைத்தும் கடவுளின் பிள்ளைகள் என்று மதித்துப் பரிவுடன், ஏன் பக்தியுடன் பணிபுரிய வேண்டும் என்று கூறுகிறார். வெறும் அறவுரையாகக் கூறுவனதவிர அங்ஙனம் வாழ்ந்து சிறந்த தலைவர்ஒருவரை உதாரணமாகக் காட்டுவதே நலமெனத் தெளிந்து காந்தியடிகளை நம் மனக்கண்முன் கொணடுவந்து நிறுத்துகிறார். பாட்டைப் பார்ப்போம்.

"மன்னுயிர் எல்லாம்
கடவுளின் வடிவம்
கடவுளின் மக்கள் என்றுணர்தல்
இன்னமெய்ஞ் ஞானத்
துணிவினை, மற்றாங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னிய கிடக்கும்
அரசியல் அதனில்
பிணைத்திடத் துணிந்தனை
பெருமான்'

காந்தியடிகளின் பண்பாட்டையும் சீலத்தையும் பாடிப் பரவுதன் மூலம் தலைவர்களுக்கு வேண்டிய குணங்களையும் ஒழுக்கத்தையும் நன்கு புலப்படுத்திவிட்டார்; இல்லையா?

இறுதியாகத் தலைவர்கட்கு இருக்கவேண்டிய மேலான ஒரு குணத்தைக் காட்டுகிறார் பாரதி. அதாவது தானே தலைவன் என்றெண்ணி இறுமாந்து தலைதடுமாறிப் போகப்படாது. தலைவர் தலைவனாக ஆண்டவன் ஒருவன் என்றுமுள்ளான் என்பதை மறக்

காமல் நடக்கவேண்டும் என்றெல்லாம் எச்சரிக்கிறார் - வழிகாட்டுகிறார் பாரதி.

ஒரு தலைவன் என்றும் எப்பொழுதும் கடவுளை மறவா உள்ளத்தனாயிருக்கவேண்டும் என்பதை எத்தனையோ இடங்களில் சுட்டிக்கொண்டே போகிறார் பாரதி. மாஜினியின் உறுதிமொழியைப் "பொருள் கடவுள் திருவடி ஆணை" என்றே பாரதி தொடங்குகிறார். "ஈசன் இங்கு எனக்கும் என்னுடன் பிறந்தோர் யாவர்க்கும் இயற்கையின் அளித்த தேசம்" என்று நினையூட்டுகிறார் உறுதி தவறினால் "ஈசனார் என்னை நாசமே புரிக" என்று முடிவு கட்டுகிறார்.

பரிபூரண சுதந்திரப் பிரியரான பாரதி, அடிமை நிலையை எவ்வளவு வெறுத்தார் என்பதை நாம் நன்கறிவோம். அதனால் தான் "பூமிதனில் எவர்க்கும் அடிமை செய்யோம்" என்று வீறுகொண்டெழுகிறார். ஆனால் அப்படிச்சொன்ன வாயை மூடாமலே தொடர்ந்து "பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்"என்று பூரிப்புடன் முடிக்கிறார். அன்னியர்க்கடிமை செய்வது தாழ்வை யளிக்கும் என்றால் ஆண்டவனுக்கு அடிமை செய்வது வாழ்வை அருளும் என்று எவ்வளவு அருமையாகக் குறிப்பிடுகிறார் பார்த்தீர்களா? இங்ஙனம் தலைவனுக்கு வேண்டிய பிற குணங்களுக்கெல்லாம் நல்ல வழி காட்டுகிறார் வையத் தலைவர் பாரதி.

வாழ்க பாரதி.
வளர்க நல்லறம்.

—அருள் திரு குன்றக்குடி அடிகளார்.

—மணிமொழிப் பதிப்பகம்.

# அருட்பிரகாச வள்ளலார் சன்மார்க்க சங்கம், திருத்தணிகை

## வேண்டுகோள்!

பேரன்புடையீர்,

திருத்தணிகைப் பதியில் ஆடிக் கிருத்திகை, தெப்பத் திருவிழா 3 நாட்களிலும் ஸ்ரீ முருக பிரானைத் தரிசிக்க வரும் பக்தகோடிகள் ஜல வசதியின்றிப் படும் கஷ்டத்தைக் கூடியவரையில் நீக்குவதற்காகத் தண்ணீர்ப்பந்தல் நிறுவி, அன்னம், நீர்மோர், பானகம் முதலிய ஆகார வகைகளால் கடந்த நாற்பது ஆண்டுகளாக, பலவித இடுக்கண்களிலும் களைத்து வருபவர்களுக்கு வசதியளித்து வரப்படுகின்றது.

வள்ளலார் திருப்பாடல்கள் ஆயிரம் பெற்ற இவ்வரிய ஸ்தலத்தில் அவர்கள் நோக்கங்களைப் பரவச்செய்ய ஒரு நிரந்தரமான கட்டிடம் அத்தியாவசியமாக இருக்கிறது.

இதைக் கண்ணுறும் கருணையுள்ள தாய்மார்களும், மற்றப் பெரியோர்களும் மனமுவந்து மேற்குறித்த பெருந் திருப்பணிக்கும், கட்டிடம் அமைப்பதற்கும் வேண்டிய பொருளாகினும் சாமான்களாகிலும் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## கருத்து

தணிகை முருகனது தண்ணருள் வள்ளலாரைத் தேடி ஆட் கொண்டது;
அத்தகு வள்ளலார்க்குத் தணிகையில் இடந்தேடுகிறது புண்ணிய உள்ளம்;
நாட்டின் செல்வமும் இத் திருப்பணியைத் தேடிக் கண்டுகொள்ள வேண்டும்.

கையொப்பம்:—இளவழகனார்.

26—1—54.

இங்ஙனம்:

அடியார்க்கு அடியேன்,
E. S. புண்ணியகோடி முதலியார்,
காரியதரிசி.
நெ. 140, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1.

தங்களுக்குத் தேவையான
எல்லா விதமான மருந்து வகைகளும்
எங்களிடம் எப்பொழுதும்
கிடைக்கும்.

**மேயர் அண்டு கம்பனி,**

இங்கிலீஷ் மருந்து வியாபாரிகள்,
16. ஐயா பிள்ளை தெரு,
பி. டி. சென்னை-3.

டெலிபோன் 3757 போஸ்டு பாக்ஸ் நெ 504.

# சிவம் *

(மோகனரங்கன்)

(முன் தொடர்ச்சி)

## 2. வடிவச் சிறப்பு:

'சிவம் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி யெம்மான்' சிவம் செம்மை, சிவப்பு நிறம் கொண்டவர். சிவப்பாயிருக்கிறவர்களெல்லாம் சிவம் என்று பெயர் வைத்துக்கொள்ளலாம்! கதிர்காமத்தில் எல்லோரையும் 'அரோகரா' என்று அழைத்துக் கொள்வதுபோல, சிவப்பாயிருப்பவர்கள் ஒருவரை யொருவர் சிவம் என்றும் அழைத்துக் கொள்ளலாம்! சக்தி அம்பிகை, நீலநிறமானவள். சக்தி கொண்டால் நீலமாய்க் கறுப்பாயிருக்கும். ஆழமான நீர்நிலைகளும், நட்பமான வான்வெளியும்நீலமாயிருப்பதைக் காணலாம். பெண்கள் சக்தி மயம். கறுப்பாயிருப்பவர்களுக்குச் சக்தி (பெண்மை) அதிகம். அதனால் ஆண்கள் சிவப்பாயும், பெண்கள் கறுப்பாயும் இருப்பது நல்லதுதான். 'சி' சிறப்பு எழுத்து; சிவத்தை, சிவந்ததை உணர்த்தும். சிவந்த வடிவமெல்லாம் சிவம் எனக் கொள்ளலாம். பஞ்ச பூதங்களில் சிவப்பு நிறம் தீ; விளக்கு வடிவம், சிவலிங்கம்; சோதி வடிவமெல்லாம் சிவம். செம்மைப்பட்ட குணமாயிருந்தால் சிவம்.

சிவம் இயற்கை. அதனால் இயற்கைப் பொருளெல்லாம் சிவம். சிவபெருமான் கோலம் இயற்கைவடிவம்; இந்த உலகம் முழுதும் பரந்து இந்த உலகின் மூல சக்தியாயிருப்பது சிவம். உலகைப் பார்ப்பதானால் மேலே பரந்த வானம், கீழே விரிந்த கடல், நடுவே உயர்ந்த மலைகள்; உலகை அண்ணாந்தும், தாழ்ந்தும், நாலா பக்கமும் பார்த்து இந்தக் கோலத்தில் படம் பிடித்த மாதிரியிருப்பது சிவபெருமான் கோலம். மலைமீது புல் செடி கொடி வன விருக்ஷங்கள்; சுனை ஆறு அருவிகள்; மான், ஆ, சிறுத்தை, புலி, யானை முதலிய விலங்கினங்கள்; மலை உச்சியில் மேகங்கள் தவழுகின்றன. வானில் சந்திரன் உலவுகிறான்; மலையில் மடிந்த உயிர்களின் எலும்புகள் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கின்றன. கீழே கடல். இந்த இயற்கை அழகுகளை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து அமைத்த வடிவத்தில் சிவபெருமான் கோலத்தைப் பார்க்கும்போது, சடையில் வானத்து மேகத்தையும், அதில் கங்கை அழகுற வீழ்தலையும், எழிலுறவிளங்கி ஒளிரும் சந்திரனையும், பசும் போர்வை போர்த்த மாதிரி நீல நிறமான அம்பிகையைத் தன் மேனியில் இடப்பாகம் கொண்டிருத்தலையும், கையில் மான், இடுப்பில் புலித்தோல், மார்பில் மான் தோல் போர்த்திருத்தலையும், இடபத்தை வாகனமாகக்கொண்டிருத்தலையும், எலும்பு மாலை காலமறியப் பல் ஊழிக்காலந் தொட்டு நிலைபெற நின்று விளங்குதலையும், கீழே காலில் சதங்கை ஒலிபோல் கடல் ஒலி முழக்கிக் கொண்டிருத்தலையும் பார்க்கலாம், அகண்ட கோலத்தில் விசுவரூபத்தில் விளங்குகிறார் சிவம். உலகின் இயற்கைத் தோற்றமே சிவபெருமான் கோலமாகிய சிறப்பு. அதனால் விசுவரூபம், உலகத்தோற்றம், இயற்கை வடிவம், இறைவடிவம், சிவவடிவம், எல்லாம் ஒன்றே.

இயற்கையைக் கடந்து இறைவன் எங்கோ இல்லை. அவன் சக்திகள் பூரணமாகத் தெரியவில்லை. தெரிந்தும் தெரியாத மாதிரி இருக்கும் பொருளை வடிவத்தில் கொண்டுபோவதென்றால், அதுவே கோயில் மூலத்தானத்திலுள்ள இலிங்க வடிவம். இயல்பான வடிவமாகக் கண் மூக்கு கைகால்களுடன் கொள்ள முடியாது. தெரிந்தும் தெரியாததுமான மூலப் பொருளுக்கேற்ற வடிவமாக லிங்கம் அமைந்திருக்கிறது. அது, அருவம், உருவம், அருவுருவமான மூர்த்தி; பல நல்ல கருத்துக்கள் லிங்கத்துக்கு உண்டு. முழுமையாக உள்ள, நிறைவாக உள்ள, உண்மையாக உள்ள வடிவம் இந்தச் சிவ வடிவம் எனக் கண்டுகொண்டனர், நம் சைவச் சான்றோர். உள்ளதைக் குறைத்தும் நிறைத்தும் சொல்லவில்லை; அவரவர் உள்ளத்தளவாக முடிபு கொள்ளலாம்.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# திருவள்ளுவர் கண்ட நாடு

(மோகனரங்கன்.)

30-12-1953 மாலை, அரக்கோணம் நகர் மண்டபத்தில் தொல்காப்பியர் கழக ஆண்டு விழாவும் அதனோடிணைத்துத் திருவள்ளுவர் விழாவும் நடந்தன. நம் குருகுல மாணவர் மெய்கண்டானின் பெரு முயற்சியால் அன்று நம் ஆசிரியரவர்கள் 'நாடு' என்னும் பொருளைப் பற்றி அரிய விரிவுரையாற்றினர். அவ்வூர்ப் பெருமக்கள் பெருந் திரளாகக் கூடி மிக்க ஆர்வத்துடனும் அமைதியுடனுமிருந்து ஐயா அவர்களுடன் திருவள்ளுவர் கண்ட பழஞ் செந்தமிழ் நாட்டுக்கு உள்ளத்தளவாய் உலவி உவகை எய்தினர். அவ்வமுதப் பொழிவின் சுருக்கம்:—

"தொல்காப்பியக் கழகத்தார் தம் ஆண்டு விழாவும் அதோடு திருவள்ளுவர் விழாவும் இணைத்துக் கொண்டாடுகிறார்கள். தொல்காப்பியர் பெயர்ச் சிறப்புமிருக்கிறது; மாட்சி மிக்க நல்ல நாள்; நகர் மண்டபத்தில் நடப்பது பின்னும் சிறப்பு. இப்பெருநாளில் அடியேனைப் பேசச் செய்திருப்பது பற்றி மகிழ்ச்சி.

தொல்காப்பியர் பெயரால் ஒரு கழக மிருந்து செயலாற்றுவதே அருமை; பெரும்பாலும் கேட்டதில்லை. எதோ இரண்டோர் இடங்களில் தொல்காப்பியர் நூல் நிலையம் என்றிருப்பதாகக் கேள்வி. அவர் பெயர் வைத்திருப்பதற்குக் காரணம் தமிழ் அன்பும் ஆர்வமும் எனத் தோன்றுகிறது. அவர் ஒருவரே மிகப் பழமையான ஆசிரியர். அவர் காலத்தைப் பற்றிப் பலர் பல வகையாகச் சொன்னாலும், அவர் பல்லாயிரவாண்டுகளுக்கு முன்னிருந்தவர் என்பதில் சந்தேகமே இல்லை. சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் (கி. மு. 3000) இருந்தவர் எனலாம். அவர் தமிழ் இலக்கண நூல் செய்தவர். தம் புலமைப் பெருமை தோன்றும்படி கடினமான வார்த்தைகளால் எழுதவில்லை; நம்மீது மிக்க இரக்கமுடையவர்; மிக எளிய இனிய, இன்றும் நம்மால் வழங்கப்படும் வார்த்தைகளால், அகப்பொருள் நுட்பங்கள் மிளிர இலக்கணம் செய்தவர்; தக்க பெரியவர். அவர் அருமையும் பெருமையும் அறிந்து அவர் பால் நன்றி தோன்ற அவர் பெயரால் கழகம் அமைத்தது போற்றத் தக்கது.

தமிழில் நமக்குள்ள நூல்கள் கொஞ்சம்; விரிவாய் மிகுந்த நூல்கள் தமிழிலில்லை. சுருக்கமாய்ச் சில நூல்களுள. திருக்குறள் ஒரு நூல் போதும் உலகை வெல்வதற்கு. இச் சில நூல்களுக்கு இலக்கணம் காட்டியவர் தொல்காப்பியர்.

தொல்காப்பியம் திருக்குறள் இரண்டுதான் தமிழில் தனி நூல்களாய், முழு நூல்களாய் உள்ளவை. (மற்றவை தொகுப்பு, பிற்பட்டவை,) உள்ள இரண்டில், ஒன்று இலக்கணம், ஒன்று இலக்கியம். இவை, எவ்வளவோ காலமாகியும் இன்னும் பெருமை குன்றாது ஒன்றற்கொன்று தழுவிப் போற்றத்தக்கவாய் நிலைத்து நிற்பவை. முழுமையாகச் சிதைவில்லாமல் இன்றளவும் நிலைத்து உள்ளவை இவ்விரண்டும். நமக்குச் சுலபமாகப் புரிந்துகொள்ளும்படியான ஒப்பற்ற முறையில் இருக்கின்றன. நாமும் இவைகளின் பெருமையை எண்ணிப் பார்த்து இரண்டோடும் சேர்ந்து போவது முதன்மை!

தொல்காப்பியர் திருவள்ளுவர் இருவருக்கும் ஒரே குறிக்கோள். ஒருவர் சொல், பொருள், யாப்பு, செய்யுள் நயம் இலக்கணங்கள் வகுத்து ஆராய்ச்சியில் எட்டிப்போனார். மற்றவர், அன்றாட வாழ்க்கைக்கு எப்படி உபயோகப்படுவதென வழி வகுத்துச் சென்றார். ஆராய்ச்சியை விட அனுபவம் நல்லது. ஆராய்ச்சி கட்டாயம்; அனுபவிப்பது அதிலும் மிகக் கட்டாயம். உதாரணமாக, ஒருவன் குளத்தில்போய் நன்றாய் முழுகி உடம்பெல்லாம் குளிரும்படி குளித்தால் அவனுக்குத் தண்ணீர் குடிக்க வேட்கை எழாது. மற்ற நேரத்தில் தாகத்தால் ஒரு குடம் நீருக்குத் தாவுபவன், ஒரு குளத்து நீரிருந்தும் வேட்கை கொள்ளவில்லை; அப்படியே ஆராய்ச்சி; அனுபவப்படும்போது இராது. அநுபவம் நன்றாய் வந்துவிட்டபின் ஆராய்ச்சிக்கு விடை காணத் தக்க அதிகாரியாவான். ஆராய்ச்சி ஆரம்ப நிலை; அதனால், அனுபவம் நல்லது. இக் கருத்தை நாகன் தேவனார் திருவள்ளுவ மாலையில் "தாளார் மலர்ப் பொய்கை......." என்னும் புகழுரையில் விளக்கியிருக்கிறார். [illegible] ஆராய்ச்சி வேண்டும்; [illegible] இருக்கும்போது, அதி

விருந்து அநுபவிக்கும் திறமும் பெறவேண்டும். தக்கவருக்கு அப்படி இருக்கும். ஆ லின் கருத்துக்களில் போம்போதே சொற்சுவை நயம் அழகுகள் நளினங்களை அநுபவித்துக் கொண்டே போவர். ஒரு சோலையைக் காணும்போது அங்குள்ள மலர்கள் தளிர்கள் செடி கொடிகள் இயற்கையழகுகளிலும் இவைகளுக்குக் காரணமாக இறைவனிடமும் ஒன்றிப் போவதுபோல, சொல் பொருள் யாப்பு இலக்கண அழகுகளில் ஒன்றி, மொத்த அழகு தெரிந்து அநுபவத்தில் போக வேண்டும்; தொல்காப்பியர் இலக்கணம் உரைத்தது கருத்தின்மீது செல்லத்தான். சொல்லும் பொருளும் அநுபவிப்பதற்கு இலக்கணம் தெரியவேண்டும். அதிகமான சூத்திரங்கள் பொருள் இலக்கணத்திற்கு அமைத்திருக்கிறார். 1600 சூத்திரங்களில் சுமார் 1000 பொருளுக்கு. அதாவது பொருளுக்கு, கருத்துக்கு இலக்கணம். கருத்தை எப்படி அநுபவிப்பது எனக் காட்டுவது இலக்கணம். உதாரணமாக நட்பு என்றால் உடப்புக்குநட்பா, உள்ளத்துக்கு நட்பா, உயிர் நட்பு வாழ்க்கையில் எவ்வளவு உபயோகப்படும் எனக்காட்டுவது. திருக்குறள் நேராய் எல்லாம் பார்த்துச் சொல்வதால் அதில் அமிழ வேண்டும். கருத்துக்கு இலக்கணம் சொன்னவர் தொல்காப்பியர் ஒருவரே. தமிழ் இலக்கணம் ஒன்றுதான் கருத்தின்மேல் மிகு நாட்டம் கொண்டது. வெறும் சொல் கருத்தன்று. குழந்தை முதல் கடைசி தருணம் வரையில் வாழ்க்கை நடத்த இலக்கணம் உரைத்தது. அப்படிக் கருத்தில் நாட்டமுடையவர் கழகம் இது. கருத்தில் நாட்டமுடைய திருவள்ளுவர் விழா கொண்டாடுகிறது. தொல்காப்பியர் கழகம் திருவள்ளுவர் விழாக் கொண்டாடுவதில் இயைபு இருக்கின்றது.

திருக்குறளுக்கு அற நூல் எனப் பெயர். அறம் பொருள் இன்பம் சொல்கிறது; அதற்கு இணையாக வீடு பெறப்படுவது. 'அறன் அறிந்தேம்; ஆன்ற பொருள் அறிந்தேம், இன்பின் திறன் அறிந்தேம்; வீடு தெளிந்தேம்' அதனால் நாலும் தெளிவாகிறது. அறம் பொருள் இன்பம் மூன்றும் கேட்டு வீடு தெளியும்படி வைத்திருக்கிறார். நமக்கு அநுபவத்தில் தெளிவது வீடு. மன அறிவு பகுத்தறிவு ஆராய்ச்சி செய்யும்; நல்லது கெட்டது எனப் பகுத்துப் பிரித்து அறியும். அது மட்டுமல்ல எல்லை. அதற்கு மேல் உயிர் அறிவு இருக்கிறது. மனம் ஒன்றைப் பகுத்தறிந்தபின் கெட்டதில்போகாதவாறு தடுத்து நல்லதில் போம்படி பண்ணும் உயிர் அறிவு "....தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு" பகுத்தறிவால் நன்னடை வராது; நன்னடை வர வேண்டுமானால் உயிர் அறிவில் போக வேண்டும்; அதனால் பார்த்து அறிந்து பின் உணர்வால் தெளிய வேண்டும்; தெளிந்தபின் நிலை கொள்ளவேண்டும்.

நூல்கள் அறிவு வளரச் செய்யும். அதற்குமேல் விடுதலைக்கு அவரவர்கள் முயற்சி கொள்ள வேண்டும். முப்பாலில் வீடு இருக்கிறது. அறம் பொருள் இன்பம சொற்களால் பேசப்பட்டது. பேசப்படாதது அநுபவத்தில் அமைவது வீடு. அதில் அறம் முக்கியம்; பொருளும் இன்றியமையாதது. ஏனெனில், அஃதின்றி அறமும் இன்பமும் நடவா. இன்பம் வீட்டுக்குப் போக வழி காட்டுகிறது. அப்படி மூன்றும் முக்கியமானவை. இவ்வமைப்புடையது திருக்குறள்.

பொருள் கட்டாயம் வேண்டுவதுதான். பொருள் என்றால் காசு அன்று. பொருட்பால் 70 அதிகாரங்களில் ஒரே ஒரு அதிகாரத்தில்தான் "பொருள்செயல் வகை" எனச் சொல்லியிருக்கிறார். காசைப் பற்றிய பேச்சு மிகக் குறைவு. காசு இயற்கைப் பொருள் ஆகாது. உற்பத்திதான் பொருள். பொருளாதாரம் முக்கியந்தான். துறவறத்திற்கும் பொன்னும் பொருளும் வேண்டும். பணத்தை நல்லதில் செலவிடுவதுதான் துறவு. மனம் வாக்கு காயம் நல்லதற்குச் செலவிடுதல் துறவறம். நல்லதற்குத் தாராளமாய்க்கொடுப்பவர், பற்றுவிட்டவர். ஒட்டிக்கொண்டில்லாத நிலை! உலகில் பெரியவர்கள், நல்லவர்கள், சான்றோர்கள், காரியக்காரர்கள், நல்ல ஆற்றல் திறம்படைத்தவர்கள்; ஒட்டியும் ஒட்டாதிருப்பார்கள், இல்லறம் மனைவி மக்கள் பொன் பொருளோடு கூடி வாழ்ந்துகொண்டே தாமரையிலையில் தண்ணீரிருப்பது போல உலகில் ஒட்டியும் ஒட்டாதும் வாழ்வர். அதனால் துறவுக்கும் பொருள் வேண்டும்.

(வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்:)